## பள்ளிகளில் சமத்துவம் வளர...




கல்வி நிலையங்களில் சாதி அடையாளம் ஒழிக்கப்பட்டு, சமத்துவம் பேண வேண்டும் என பல முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது, தமிழ்நாடு அரசு. பள்ளிகளில் தொடரும் சாதிய உணர்வுகளைக் களைய, அது தொடர்பான விசாரணை மேற்கொண்டு பரிந்துரைகளை அளிக்க, ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் குழு அமைத்தது. அவரும் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளார்.

பள்ளிகளில் சாதியப் பாகுபாடுகளைக் களைந்து சமத்துவ, சமூக நீதிச் சிந்தனைகளை வளர்க்க, நீதிபதி சந்துரு அளித்துள்ள பரிந்துரைகளை சமூகநீதிக் கருத்தில் அக்கறை கொண்டோர் வரவேற்று விவாதித்து வருகின்றனர்.

1.9.2024 ஞாயிறு காலை, திண்டிவனம் நகரத்தில், 'கல்விக் கூடங்களில் சமத்துவம் பரப்புரை மாநாடு' நடைபெற உள்ளது.

'மக்கள் கல்வி இயக்கம்', 'மணற்கேணி ஆய்விதழ்', 'நகரக் கல்வி மேம்பாட்டுக் குழு' ஆகிய அமைப்பினர் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நீதிபதி சந்துரு கலந்து கொண்டு விரிவாகப் பேச உள்ளார்.

மாணவர்கள்–ஆசிரியர்கள்–பெற்றோர்கள் என மூன்று தரப்பினரும், சமத்துவ சமூகநீதிச் சிந்தனைகளை ஏற்கும் நிலையில்தான் பள்ளிகளில் சாதி ஏற்றத்தாழ்வுகளைக் களைய முடியும் என்கிற நிலையில், அது தொடர்பான பரப்புரை மற்றும் உரையாடல் களத்தை இந்த அமைப்புகள் முன்னெடுத்துள்ளன.

கல்வித்துறை சார்ந்து தமிழ்நாட்டு அரசின் தற்போதைய முன்முயற்சிகளுக்கு கல்வி வளாகச் சூழலும் ஏற்றதாக மாற வேண்டும். அதை மாற்றுவதற்கு இதுபோன்ற கருத்தரங்கங்கள் ஒவ்வொரு ஊரிலும் நிகழ வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்



### குளித்தலையில் கழகக் கால்தடங்கள்!



குளித்தலை சிவராமன்

1987-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள், கழகக் கொடியேற்று விழாவிற்காக குளித்தலைக்கு வருகை தந்தார். குளித்தலையின் மேற்குப் பகுதியான மணத்தட்டைத் தொடங்கி, கிழக்குப் பகுதியான பெரிய பாலம் வரை குளித்தலையின் குறுக்கும், நெடுக்குமாக 21 கி.மீ தூரத்திற்கு மேல் நூற்றுக்கணக்கான கழகத்தினருடன் நடந்தே சென்று 30 க்கும் மேற்பட்ட இடங்களில் கழகக் கொடியை ஏற்றினார்.

குளித்தலை நகரச் செயலாளராகவும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் இருந்த எனது வீட்டில் தளபதி ஓய்வு எடுத்தார். அன்று தளபதியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. படத்தில் எனது மனைவி அகிலாம்பாள், நான், தளபதி அவர்கள், பள்ளி உடையில் எனது மகன் சீனிவாசன் ஆகியோர் உள்ளோம். அன்று மாலை, மணப்பாறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் தளபதி அவர்களுடன் கலந்துகொண்டேன்.

**– குளித்தலை சிவராமன், செயற்குழு உறுப்பினர், கரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்!

1945-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி, அறிஞர் அண்ணா எழுதிய 'சந்திரமோகன்' அல்லது 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' நாடகம் சென்னை சுயமரியாதைச் சங்கத்தாரால் அரங்கேற்றம் செய்யத் திட்டமிடப்பட்டது. அது தொடர்பான விளம்பரம் 'திராவிட நாடு' இதழில் வெளியானது. ஆனால், திட்டமிட்ட தேதியில் நாடகம் நடைபெறவில்லை. அந்த ஆண்டு இறுதியில்தான் அரங்கேற்றம் செய்யப்பட்டது. திராவிட இயக்க வரலாற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது, இந்த நாடகம்.

# சீரணி → இளைஞர் அணி


26

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

## ஆளுமை வளர்த்த சீரணி!

ஓவியம் : ரவி பேலட்



*1971-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியிட்ட 'தமிழரசு' இதழில் சீரணி குறித்து ஓர் அறிவிப்பு வெளியாகி உள்ளது.*

*"சீரணித் தொண்டர்கள் மக்களுக்குச் சிறப்பாகவும் திறம்படவும் தொண்டாற்ற, தீவிரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு உடற்பயிற்சிகளும் அணிவகுப்புகளும் விளையாட்டுகளும் அவர்களுக்குச் சொல்லித் தரப்படுகின்றன.*


*சென்னை நகரைப் பொறுத்தவரையில், இவ்வகையில் நன்கு பயிற்சி பெற்று, எந்தப் பணியையும் மேற்கொண்டு திறம்பட நடத்த, சுறுசுறுப்புள்ள சீரணியினர் தயார் செய்யப் பட்டுள்ளனர்.*

*இத்திட்டத்தை மற்ற மாவட்டங்களிலும் செயல் படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத்தின் தலைநகரில் 200 தொண்டர்களும், பிற பகுதி களில் வட்டாரத்திற்கு (பிளாக்) 25 பேர் வீதம் மொத்தம் 100 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுவர். தர்மபுரி, கன்னியாகுமரி, நீலகிரி போன்ற சிறிய மாவட்டங்களில் தலைநகரில் 100 பேர்களும், பிற பகுதிகளில் 100 பேர்களும் பயிற்சியளிக்கப் படுவர். 20 வயது முதல் 40 வயது வரை உள்ள தொண்டர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது".*

**1971-ஆம் ஆண்டு முதல் அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு மாவட்டத்துக்கு முந்நூறு பேர் என்று இயங்கத் தொடங்கியது.**

இந்த அறிவிப்பிலிருந்து நமக்கு மூன்று விஷயங்கள் தெரிய வருகின்றன.

முதலாவது, 1967-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரை சீரணி மூலம் பள்ளிக்கூடம் கட்டுவது, சாலை அமைப்பது போன்ற சமூக மேம்பாட்டுப் பணிகள் மட்டுமே மேற் கொள்ளப்பட்டு வந்த நிலையில், சீரணியினருக்கு முகாம்களில் பயிற்சி அளித்து, அவர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகளும் அளிக்கப்படுவது, 1971-ஆம் ஆண்டிலிருந்துதான் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு நடத்தப்பட்ட முகாம்கள் எல்லாம் ஒரு சோதனை ஓட்டம்தான். மேலும் அவற்றில் சமூகப் பணிகளுக்கே முக்கியத்துவம் அளித்து பயிற்சி அளிக்கப்பட்டதே தவிர, சீரணி யினரின் தனிப்பட்ட ஆளுமை வளர்க்கும் பயிற்சிகள் அளிக்கப்படவில்லை.



இரண்டாவது, அதுகாறும் மாவட்டத்துக்கு நூறு பேர் என்ற எண்ணிக்கையில் சீரணி இயங்கி வந்தது. 1971-ஆம் ஆண்டு முதல் அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு மாவட்டத்துக்கு முந்நூறு பேர் என்று இயங்கத் தொடங்கியது.

மூன்றாவது, அதுவரையில் வயது வித்தியாசம் இல்லாமல் யார் வேண்டுமானாலும், சீரணியில் இயங்கலாம் என்ற நிலை மாறி, 20 முதல் 40 வயது வரையிலான இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

இதே இதழில், சீரணி யினரின் சேவை குறித்து விளக்கும்படியாக கோபன் என்பவர் வரைந்த இரு பக்கப் படக்கதையும் வெளி வந்தது.

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

26

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்..."

## என்ன செய்தார் எம்.ஜி.ஆர்.?

***அண்ணா ஆட்சி அமைப்பதற்கு எம்.ஜி.ஆர்.தான் காரணம் என்றும், எம்.ஜி.ஆர். இல்லையென்றால், தி.மு.க.வின் 'உதயசூரியன்' சின்னம் பாமர மக்களுக்குத் தெரிந்திருக்காது என்றும், ஊடக விவாதங்களி லும் சமூக வலைத்தளங்களிலும் சிலர் கருத்துகளைத் தெரிவிக்கிறார்களே?***

*எம்.ஜி.ஆர். இல்லாவிட்டால், 1969-இல் கலைஞர் முதல்வராகியிருக்க முடியாது என்று அ.தி.மு.க.காரர்கள் சொல்லி வந்தார்கள். அந்த சமயத்தில் எம்.ஜி.ஆரும் தி.மு.க. எம்.எல்.ஏ.தான். கலைஞரை முதல்வராக்கும் வலிமை எம்.ஜி.ஆருக்கு மட்டும் இருந்திருந்தால், அவரே முதல்வராகியிருக்கலாமே என்று தி.மு.க.வினர் திருப்பிக் கேட்டதும் பதிலில்லை.*

*இப்போது ஒரு படி மேலே போய், அண்ணா ஆட்சி அமைப்பதற்கே எம்.ஜி.ஆர்.தான் காரணம் என்கிறார்கள்.*

*தி.மு.க. முதன்முதலாக 1957-இல் தேர்தலில் களமிறங்கி 15 சட்டமன்ற உறுப்பினர்களும், 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெற்றி பெற்றனர். அப்போது பெரும்பாலான தி.மு.க. வினருக்கு சுயேட்சை சின்னமான உதயசூரியன் ஒதுக்கப்பட்டது. அதை பாமரர்களும் புரிந்து கொண்டுதான் இந்த வெற்றியைத் தந்தனர். அப்போது தி.மு.க.வில் எம்.ஜி.ஆருக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. கலைஞர் மூலமாக தி.மு.க.வுக்கு வந்த எம்.ஜி.ஆர்., ஒரு முறை காமராஜர் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு, "காமராசரே என் தலைவர். அண்ணா எனக்கு வழிகாட்டிதான்" என்று பேசினார்.*

*1962-இல் எம்.ஜி.ஆருக்கு எம்.எல்.சி. பதவி அளித்துப் பெருமைப்படுத்தினார் அண்ணா. அந்த அண்ணா ஒரு போராட்டத்தில் சிறையில் இருந்தபோது, எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்வதாக எம்.ஜி.ஆர். அறிவித்தார். தி.மு.க.வினர் கொந்தளிப்படைந்தனர். அப்போது வெளியான எம்.ஜி.ஆர். நடித்த 'என் கடமை' என்ற படம் வெளியாகித் தோல்வியடைந்தது. அதனால், அண்ணாவிடம் எம்.ஜி.ஆர். மன்னிப்புக் கேட்ட நிகழ்வும் நடந்தது. தி.மு.கவின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். தன் படங்களில் கொடி நிறம், சின்னம் ஆகியவற்றைக் காட்டினார் என்பது உண்மை.*

**எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்வதாக எம்.ஜி.ஆர். அறிவித்தார். தி.மு.க.வினர் கொந்தளிப்படைந்தனர். அப்போது வெளியான எம்.ஜி.ஆர். நடித்த 'என் கடமை' என்ற படம் வெளியாகித் தோல்வியடைந்தது.**




*தி.மு.க.வின் மூலமாக எம்.ஜி.ஆர். தன் செல்வாக்கை வளர்த்துக் கொண்டார் என்பது கூடுதல் உண்மை. 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது எம்.ஜி.ஆரை எம்.ஆர்.ராதா சுட்டதால் ஏற்பட்ட தாக்கம், தேர்தல் களத்தில் எதிரொலித்தது. அதைவிட முக்கியமாக காங்கிரசுக்கு எதிரான அலை வீசியது. மொழிப் போர்க்களத்தில் தி.மு.க.வின் செல்வாக்கு வளர்ந்திருந்தது. அதனால், அண்ணா ஆட்சியமைத்தார். எம்.ஜி.ஆரும். தி.மு.க. எம்.எல்.ஏ. வாகத்தான் ஜெயித்தார்.*

...வினா தொடரும்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

585

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131